யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.

# இல. தூதரக அதிகாரிகள் வெளிநாடுகளில் தஞ்சம்

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலத்தில் வெளிநாடுகளில் இலங்கை தூதரகங்களில் நியமிக்கப்பட்டிருந்த பல அதிகாரிகள், அந்தந்த நாடுகளில் அரசில் தஞ்சம்கோரிவருகின்றுர்கள் என்று பி. பி.சி. சிங்களசேவை தெரிவித்தது.

இதுபற்றிவெளிநாட்டமைச்சர் திரு. லக்ஸ்மன்கதிர்காமர் நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில்; பிரித்தானியாவில்உள்ள இலங்கைத்தூதுவராலயத்தில் முதலாவதுசெயலாளராக கடமையாற்றிய

[6ம் பக்கம் பார்க்க[

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 29 இதழ் 314
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-12-1994

## பூநகரிப் பாதையை திறக்க முயற்சி?

(கொழும்பு)

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை பொதுமக்களின் போக்கு வரத்திற்கு திறப்பது குறித்து அரசு விடுதலைப் புலிகளுக்கு செய்தி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் விடுதலைப்புலிகளுக்கு அரசு அனுப்பி வைத்த கடிதத்தில் மேற்படி பாதை திறப்பது குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், நத்தார் காலத்துடன் யுத்த நிறுத்தம் அறிவிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

மேலும் அரசு தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை தொடர்வது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-சி

# விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்யும் நோக்கம் எதுவும் அரசுக்கில்லை

## சந்திரிகா 'ரைம்ஸ்'க்கு பேட்டி

[கொழும்பு]

**விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை கைது செய்து சிறையில் அடைக்கும் நோக்கம் எதுவும் இலங்கை அரசிடம் இல்லையென ஜனதிபதி சந்திரிகா 'ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

அப்பேட்டியில் அவர்மேலும் கூறுகையில்; யாழ்ப்பாண மக்கள் அவரை ஜனநாயகமுறைப்படி தலைவராகத் தேர்ந்தெடுத்தாலும் அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது பிரபாகரனை சிறைப்படுத்தும் நோக்கம் அரசுக்கில்லை. கைது செய்வதாயின் உலகில் எங்குமே அமைதி ஏற்பட வாய்ப்பில்லை என்றுர்.

ஜனதிபதித் தேர்தலில் சமாதானத்துக்காகமக்கள் திருமதி சந்திரிகாவுக்கு பெருமளவில்

(2ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை இந்தியாவிற்கு கொண்டுவருவதுபற்றி ஆராய்வு

### — இந்திய அமைச்சர் கூறுகிறுர்

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் பிரதான குற்றவாளியாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்துச் சாத்தியக்கூறுகள் பற்றியும் இந்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், இது குறித்து இலங்கை அரசுடன் அணுகுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் இந்தியவெளியுறவுத்துறைஅமைச்சர் திரு. பாட்டியா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதைத் தெரிவித்த பாட்டியா, அரசின் பல்வேறு அமைப்புக்கள் இப்பிரசனை குறித்துப் பரிசீலித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்

(6ம் பக்கம் பார்க்க)

★ தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு:

## ஒன்பது மாணவர்களுக்கு மிகச் சிறந்த பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்பட்ட இவ்வாண்டுக்கான தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுப் பெறுபேறுகள் இன்று 15ம் திகதி வெளியாகின்றன. 16,500க்கும்மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய இப்பொதுக்

(2ம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழு சந்திரிகாவைச் சந்தித்தது

[கொழும்பு]

இலங்கையில் நடைபெறும் கொடிய யுத்தத்தை நிறுத்தி, சமாதானமாகப்பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும் என்று கோரி மாபெரும் சமாதான ஊர்வலத்தை நடாத்திய குழு

[2ம் பக்கம் பார்க்க[

## பல்கலை. மாணவர் கொழும்பில் பேரணி

(கொழும்பு)

கொழும்பு, பேராதனை, ருகுணு ஸ்ரீ ஜயவர்த்தனபுர களனி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மருத்துவத்துறை மாணவர்கள் 2000 பேரளவில் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர் என்று பி. பி. சி, சந்தேசிய தெரிவித்தது,

,லிப்டன்' கம்பனிக்கு அருகாமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தும் மாணவர்களின் வதிவிடப் பிரச்னை சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் எதிர்பத் தெரி

[2ம் பக்கம் பார்க்க[

★ சிலாபத்தில் அமையும்

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' குறித்து இந்தியா அச்சம் தெரிவிப்பு

(புதுடில்லி)

சிலாபத்தில் அமைக்கப்பட்டு வரும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் குறித்து இந்தியா இலங்கையிடம் அச்சம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமரிடம் இது பற்றி தெரிவித்த இந்திய அதிகாரிகள் இந்தியாவின் நலனுக்கு குந்தகம் விளை

(2ம் பக்கம் பார்க்க)

★ கொழும்பில்

## அமெரிக்க தூதரகம் முன் பெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக நேற்று மதத் தலைவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

பௌத்த-கிறிஸ்தவ மதத் தலைவர்களும், பொதுமக்களும் ஊர்வலமாகச் சென்று தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், இது குறித்து அறிக்கை ஒன்றையும் அமெரிக்க உயர் ஸ்தானிகரிடம்

(6ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பாதையில் வைத்து பயணிகள் சோதனையிடப்படுவர்!

### — இராணுவத்தினர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆனையிறவுப் பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறப்பதாயின் அவர்களை தாம் சோதனையிடுவோம் என இராணுவத்தினர் அரசுக்கு தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இப்பாதையூடாக செல்பவர்கள் ஆயுதங்கள், வெடிமருந்துகளைக் கொண்டு செல்கிறுர்களா என்று அறிய தாங்கள் பயணிகளை சோதனையிடு

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர்

நாள், திதி, யோகம், நட்சத்திரம், கோயில் தினங்கள், விடுமுறை நாட்கள் முதலிய பல விபரங்களும் அடங்கிய மிகச் சிறந்த கலண்டர் மலிவு விலை ரூபா 30/- மட்டுமே. (ஏ 4581)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1342)

UNIVERSITY OF JAFFNA SRI LANKA

FACULTY OF SCIENCE

The Commencement of the First Semester (1993/94) for the 2nd 3rd and 4th year students and the 2nd Semester (1993/94) for the first year students have been postponed from 19-12-1994 to 27-12-1994

— REGISTRAR

(A 4584)


## பூச்சி மருந்து சிகிச்சை

(கொழும்புத்துறை)

யாழ். ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கைதடி வயோதிபர் இல்லம், இரட்சணிய இல்லம், சைவச் சிறுவர் இல்லம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு பூச்சிப் பேதி மருந்து வழங்கப்பட்டது. (154)

## மா விநியோகம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ''உ'' பங்கீட்டு அட்டைக்கு தலா ஆறு கிலோ மாவையும், அரை கிலோ சீனியையும் இவ்வாரம் தொடக்கம் சங்கக் கிளைகள் ஊடாக விநியோகித்து வருகின்றது. அதே வேளை பங்கீட்டு அட்டைக்கு ஐந்து லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் 20 ரூபா விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது, (72)

# பயிலுனர் ஆசிரியர் போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலம் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான தகுதியுடையவர்களை பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 28-ந் திகதி யாழ்ப்பாணத்தில் ஐம்பது பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

இதற்கான அனுமதி அட்டைகள் காலக்கிரமத்தில் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். -ரி

## விதி திருத்தம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியிலிருந்து சங்கானை செல்லும் பிரதான வீதி இவ்வாரம் தொடக்கம் திருத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை சித்தன்கேணிச் சந்தியிலிருந்து சங்கானை வரை செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் உள்ளது. -72

## உபதபால் அலுவலகம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கடந்த இரண்டு வருட காலமாக சங்கானை தபால் அலுவலகத்தில் ஒரு பகுதியில் செயற்பட்டுவந்த இளவாலை உபதபால் அலுவலகம் சங்கானை பிரதான வீதியிலுள்ள தனியார் கட்டிடம் ஒன்றிற்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய பிரதி தபால் திணைக்கள பணிப்பாளரின் அறிவித்தலுக்கு இணங்க இந்த அலுவலகம் தனியான இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

இதேவேளை பண்டத்தரிப்பு தபால் அலுவலகம் சங்கானை தபால் அலுவலகத்தில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. (72)

யாழ், குடாநாட்டில்

# தொற்று நோய்களினால் இ மானோர் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் கடந்த ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் உள்ளிட்ட மூன்றும் காலாண்டில் 262 பேர் வயிற்றோட்டத்தினாலும் 125 பேர் நெருப்புக்காய்ச்சலினாலும் 13 பேர் செங்கண்மாரியினாலும் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை முதலாம் காலாண்டில் வயிற்றோட்டத்தினால் 422 பேரும், நெருப்புக் காய்ச்சலினால் 270 பேரும் செங்கண்மாரியினால் 37பேரும் பாதிக்கப்பட்டனர்.

இரண்டாம் காலாண்டில் வயிற்றோட்டத்தினால் 203 பேரும் நெருப்புக்காய்ச்சலினால் 157 பேரும் செங்கண் மாரியினால் 12 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 154-சி

ஆலயவளவில்

# பூட்டிவைக்கப்பட்டிருந்த இரு சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

திருவெம்பாவைப் பூசை வழிபாட்டுக்கு நல்லூருக்குச் சென்ற இருவரின் துவிச்சக்கரவண்டிகள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் யாழ். செயலக திட்டமிடல் பிரிவில் பணிபுரியும் க. சூரியகுமார் என்பவரும் நல்லூர் முத்து விநாயகர் ஆலய பூசகரும் தத்தமது துவிச்சக்கரவண்டிகளை ஆலயத்தடியில் வைத்துப் பூட்டிவிட்டு கோயில் வழிபாடு முடிந்தபின்னர் வந்து சைக்கிள்களைப் பார்த்தபோது அவை களவு போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றிக் காவல் துறையினரிடம் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## தமிழீழ பொதுக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கல்வித் தேர்வில் 7 பள்ளிகளைச் சேர்ந்த 9 மாணவர்கள் 8 பாடங்களிலும் மிகுதிறன் தேர்ச்சி (டி தரம்) பெற்றுள்ளார்கள்.

தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களையும், கல்விக் கோட்டங்களில் முதல் இரு இடங்களையும் பெற்று தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப்பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெறுகின்றவர்களின் பெயர்கள் தமிழீழத் தேர்வு ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்வின் பெறுபேறுகள் கல்விக் கோட்டங்களின் ஊடாகப் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான சுதர்சனா மகேந்திரன் 710புள்ளிகளைப் பெற்றுத் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தையும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசையும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும் பரிசுகளையும் பெறுகின்றார். இவர் தமிழ்மொழிப் பாடத்துக்கான ஆகக் கூடிய புள்ளிகளை (91 புள்ளிகள்) பெற்று விடுதலைப்புலிகள் தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கும் பணப் பரிசையும் பெறுகின்றார்.

விஞ்ஞான பாடத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் சிவராஜா சுதர்சன் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் (94 புள்ளிகள்) பெற்றுள்ளார்.

கணித பாடத்தில் யாழ் இந்துக் கல்லூரி மாணவர் சிவசோதி செந்தூரன் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் (99 புள்ளிகள்) பெற்றுள்ளார்

தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்று, தமிழீழத் தேசியத் தலைவரினதும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெறுபவர்கள்: சுதர்சனா மகேந்திரன் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி -710 (8 டீ), நவரத்தினம் இரமணன் யாழ். இந்து 698 (8 டீ), யோகநாதன் சிஎராம் யூனியன் கல்லூரி 697 (8டீ), சுகிர்தா நவரட்ணசிங்கம் வேம்படி மகளிர் 686 (8டீ), கணேசநாதன் சிறிவிசாகன் புனிதகென்றியரசர் 680 (8டீ) சிவசோதி செந்தூரன் யாழ். இந்து 679 (7டீ 1சி). இராஜேந்திரன் திலீபன் பரியோவான் 677 (7டீ 1சி). புலேந்திரராசா திலிப்காந்த் யாழ் பரியோவான் 675 (8டீ இராஜகுமாரசாமி நிஷாந்தன் சம்பத்திரிசியார் 673 (7டீ 1சி சங்கீதா பாலசுப்பிரமணியம் சுண்டிக்குளி மகளிர் 666 (6டீ 2சி) -சி

## விடுதலைப் புலிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாக்களித்துள்ளனர், இலங்கையில் அமைதி ஏற்பட வரலாறு காணாத வாய்ப்பிது ஜனாதிபதி சந்திரிகா இதனை பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென 'ரைம்ஸ்'பத்திரிகைக்கு திரு, பிரபாகரன் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி கூறியது -ம-சி

## பல்கலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தும் இடம் பெற்றதென்று பி. பி. சி. சந்தேசிய மேலும் தெரிவித்தது.

இதேவேளை இந்த மருத்துவத்துறை மாணவர்கள் பின்னர் பௌத்த கலாசார அமைச்சின் அலுவலகத்தை சூழ்ந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம -சி)

## சமாதானக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வினர், நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து அறிக்கை ஒன்றைக் கையளித்துள்ளனர்

இந்த அறிக்கையின் பிரதி ஒன்றைத் தாம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கப்போவதாக மேற்படி குழுவின் பிரமுகர் ஒருவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார் வி-சி

## சிலாபத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கும் வகையில் இந்த வானொலி நிலையம் அமையக் கூடாதெனவும் வற்புறுத்தியுள்ளனர்.

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் இங்கிருந்து இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா கண்காணிக்க திட்டமிட்டு வருவதாக இந்திய தரப்பில் ஏற்கனவே சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# அத்தாய் பகுதியில் 500 பனம்விதை நடுகை

(யாழ்ப்பாணம்)

கற்பகசோலை திட்டத்தின் கீழ் குடாநாட்டில் இவ்வருடம் ஐந்து லட்சம் பனம் விதைகள் நடுகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் வடமராட்சிப் பகுதியில் உள்ள அத்தாய் கிராமத்தில் கடந்த மாதம் 500பனம் விதைகள் நாட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

கிராமசேவையாளர் திரு. கே. ரி. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர் செ. சீனிவாசன் முதல் விதையினை நாட்டி விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சிக் கோட்ட இணைப்பாளர், யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# ஆடுவளர்க்க 75 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து 75 பேருக்கு சுயமாக ஆடு வளர்க்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய், சாவகச்சேரிப் பகுதிகளை சேர்ந்த கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் ஊடாக பயனாளிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

பயிற்சி பெற்றவர்களுக்கு சுயமாக ஆடு வளர்க்க ஒருவருக்கு ரூ. 5000/- வீதம் கடன் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிற்சி பெற்றவர்களில் 5 பேர் நல்லின கடாக்களை வளர்த்து சினைப்படுத்தல்சேவை செய்வதற்கான கடனைப் பெற்றுள்ளனர்.

எமது பால் இறைச்சிதேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்யவும் தொடர்ந்து வருமானம் கிடைக்கவும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கும் முட்டையில் ஓரளவு நிறைவு பெற்றுள்ள எமது பிரதேசம் ஆடு வளர்ப்பில் அக்கறை கொள்வது அவசியம் ஆனதாகும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நள்ளிரவு திருப்பலி

(அரியாலை)

அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் நத்தார் நள்ளிரவ திருப்பலி இரவு வழமை போல் நடைபெறவுள்ளது.

காலையில் இரு திருநாள் திருப்பலிகள் நடைபெறும் யாழ். புனிதமரியாள் பேராலயத்தில் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெறவுள்ளது. —59

# விலை உயர்வை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை எடுங்கள்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக அவசர கால நிலையை அமுல்படுத்தி, அதன் கீழே நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்க கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசைக்கேட்டுள்ளனர்.

இதை மிக விரைவாகச் செயல்படுத்துமாறும் அரசியலமைப்பில் 13-வது திருத்தச் சட்டமாக கூட்டுறவுத்துறைக்குள்ள அதிகாரங்களை மாகாண சபைக்கு அமுல் செய்ய அதிகாரங்களை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பொருட்களின் விலை உயர்வுக்கு ஊழல்களைக் களையும் முகமாக கூட்டுறவுப் பணிப்பாளர் சபைகளைக் கலைத்துப் புதிய பணிப்பாளர்கள் சபையினை ஏற்படுத்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த அவசரகாலநிலையை அமுல்படுத்துமாறும் அவர்கள் அரசைக் கோரியுள்ளனர். (ம சி)

# இனப்பிரச்னைக்கு வித்திட்டவர்கள் இந்த நாட்டை ஆண்டவர்களே

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா -

(கொழும்பு)

''இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக நாம் எடுக்கும் முடிவில் எமக்கு புகழ் கிடைக்கும் அல்லது கெட்ட பெயர் கிடைக்கும் என்று எண்ணி தீர்மானங்களை எடுக்கக் கூடாது. இது ஒரு தேசியப் பிரச்சனை பயமின்றி முடிவு ஒன்றை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கொழும்பு தமிழ்வார இதழுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நாட்டை ஆண்டவர்களே இனப்பிரச்னைக்கு முதலில் வித்திட்டுச் சென்றவர்கள் இந்த நாட்டின் கல்வி ஆரம்பத்தில் மிஷனரிகளின் பொறுப்பிலேயே இருந்தது. இவர்கள் கூடுதலான பாடசாலைகளை வடபகுதியிலேயே ஏற்படுத்தினார்கள். இதனால் தமிழர்கள் கூடுதலாக கல்வி கற்று அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்தார்கள். இது சிங்கள மக்களுக்கு பொறாமையை ஏற்படுத்தியது.

இதேநேரம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பொருளாதார ரீதியான பயன் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. இதனாலேயே ஒருவரை ஒருவர் சந்தேகப் படவேண்டியநிலை உருவானது

இனப்பிரச்னையைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு நேரத்தையும் காலத்தையும் கழிப்பதற்காக பேச்சுவார்த்தைகள் நடாத்தக்கூடாது. எமது பிரச்னைகளை தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை சிங்கள மக்களுக்கும் விளக்கமாக எடுத்துக் கூறி விளங்கவைக்கவேண்டும். அப்போது தான் தீர்வு நிரந்தரத்தீர்வாக அமையும்.

இதற்கான நல்லசூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் எமது தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் முதலில் எமது தீர்வுத்திட்டம் என்ன என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் தற்போது தேவைப்படுவது யுத்தமல்ல சமாதானம் தான். இரு தரப்பிலும் தீவிரவாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள் இவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் இனப்பிரச்சனைக்குத் தீர்வகாணமுடியாது.

சகல இனத்தவர்களும் தன் மானத்தோடும் ஆத்ம கௌரவத்தோடும் வாழ்வதற்கு தீர்வு அமையவேண்டும். இப்படியான தீர்வு காணப்படாவிட்டால் தீர்வு நிலைக்காது.

இனப்பிரச்சனை தீர்க்கப் பட்டதும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல திட்டங்களை உடனடியாக செயற்படுத்துவோம் பல புனரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்றும் தெரிவித்தார்

(வி-ரி)

## சுகாதாரக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''சத்திர சிகிச்சைக்குப் பின்னர் ஏற்படும் வலிக்கு சிகிச்சையளித்தல் என்ற தலைப்பில் யாழ்ப்பாண மருத்துவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள நியூசிலாந்திலிருந்து வந்திருக்கும் ''மயக்க மருத்துவத் துறை'' நிபுணர் டாக்டர் ஆர். ஜே. கனகசுந்தரம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனை தாதிகள் பயிற்சிக் கல்லூரிமண்டபத்தில் உரையாற்றுவார்.

சி

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எதிராக ஆர். ஆர். எம். அஜித் குமார என்பவரால் தாக்கல் செய்யப் பட்ட 50 லட்சம் ரூபா மான நஷ்டஈட்டுவழக்கைகொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி உபால அபயரத்ன நேற்று முன்தினம் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கினார்.

ஆகஸ்ட் மாத நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மனுதாரரான அஜித் குமார, கடந்த அக்டோபர் மாதத்தில் பியகம சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மத்தியில் அவ்வேளை பிரதமராக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரை நிகழ்த்திய போது தமக்கு அவமானம்ஏற்படுத்தும்சில குறிப்புகளைகுறிப்பிட்டார் என்று இந்த வழக்கில் குற்றம் சாட்டியுள்ளார்.

வழக்கை தள்ளுபடி செய்த நீதிபதி அரசியல் அமைப்பு சட்டத்தின் படி இலங்கை ஜனாதிபதியை நீதிமன்றில் விசாரணை செய்யமுடியாது என்று தமது தீர்ப்பின்போது கூறினார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் குற்றச்செயல் இடம்பெற்றதாககுற்றம் சாட்டப்பட்டிருந்தாலும் ஜனாதிபதியை நீதிமன்றத்தின் முன் சமுகமளிக்கச் செய்ய முடியாது என்று நீதிபதி தெரிவித்தார்.

(கேரி)

# இனப்பிரச்சினை தீர்வு முயற்சி சரியான திசையில் செல்கிறது

## -முன்னாள் அரச அதிபர் பேட்டி-

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வு காண எடுக்கப்படும் முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ள குழுக்கள் சரியான திசையில்சென்று கொண்டிருப்பதாக முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் இலங்கை வானொலிக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியை மீண்டும் நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண அரச அதிபராக நான்கு வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்த திரு. கா. மாணிக்கவாசகர் இலங்கை நிர்வாக சேவையில் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவராவார்.

முன்னைய அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர் இரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பரம் நம்பிக்கையில்லாததன் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை என்று கூறினார்.

இனப்பிரச்னைக்கு அரசியல் வாதிகள்மூலம் மாத்திரமே தீர்வுகாண முடியுமென்பதே யாழ்ப்பாணத்தில்தான்பெற்ற அனுபவத்தைக்கொண்டு கூற முடியுமென்றும் திரு. மாணிக்கவாசகர் கூறினார். (ரி)

## கீரிக்கோட்டுக்குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் கீரிக்கோட்டுக்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது கடந்த கால வெள்ளரிப்பினால் பாதிப்புக்குள்ளாகியிருந்த இக்குளத்தின் அணைக்கட்டுகள் வலுவூட்டப்பட்டுள்ளதுடன் குளமும் ஆழமாக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மூலம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் நன்மையடைந்துள்ளன.

# போதைவஸ்து கடத்தல் மூவருக்கு மரணதண்டனை!

(கொழும்பு)

அறுபது லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்துவை இலங்கைக்கு இறக்குமதி செய்தது, அதனை வைத்திருப்பது போன்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று இலங்கையர்களுக்கு கொழும்பு மேல்நீதி மன்றம் நேற்று முன்தினம் மரணதண்டனைவிதித்துள்ளது

சந்தேக நபர்கள் தென் இந்தியாவிலிருந்து கடந்த வருடம் ஹெரோயின் போதை வஸ்துவை கொண்டுவந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டனர்.

சுந்பிரமணியம் சண்முகவேலு, பத்மநாதன் அண்ணா, வேதமுனி சுனில் ஆகிய மூன்று சந்தேக நபர்களையும் பொலிசார் கடந்த வருடம் செப்டெம்பரில் முகத்துவாரத்தில் கைதுசெய்து இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தனர். (கேரி)

# பாப்பரசர் வருகையின்முன் சமாதானத்திற்கு முயற்சி

(மணிலா)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்றபின் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் உலகத் தலைவர் போப்பாண்டவர் என்றும் ஜனவரி 20ம் திகதியன்று திருத்தந்தை வருகை தருவதற்கு முன்பாக மக்கள் முன்னணி அரசு நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதில் கவனமாக உள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஆனால் எதிர்க்கட்சி தலைவர் காமினி திசநாயக்கா உட்பட 57 பேர் உயிரிழந்த புலனாய்வு விபரங்கள் வெளியான பின்பே அமைதி பேச்சுவார்த்தை என்று அரசாங்கம் முன்னர் கூறிவந்ததும் குறிப்பிடத்தக்கது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(கே-ரி

## மத்திய கிழக்கு

# இறுதிப்பேச்சு வெற்றி பெற ஜப்பான் உதவ வேண்டும்

(டோக்கியோ)

பாலஸ்தீனிய சுயாட்சி வெற்றிபெற ஜப்பான் ஏற்கனவே 30 கோடி ரூபா நிதி உதவி வழங்கியமைக்கு இஸ்ரேல் பிரதமர் இற்ஷாக் ரொபின் நன்றி தெரிவித்தார்.

ஜப்பானுக்கு அண்மையில் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு ஜப்பான மன்னர் மற்றும் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போதே மேற்கண்டவாறு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய கிழக்கில் மேற்கொள்ளப்படும் இறுதிப்பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற ஜப்பானின் உதவி அவசியம் தேவை என்றும் வலியுறுத்தினார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்ட முதல் இஸ்ரேலிய பிரதமர் இற்ஷாக் ரொபின் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

க

## யாழ், மா நகரசபை பகுதியில்

# கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இதுகாலவரை பிடிக்கும் நாய்களை புதைப்பதற்கு இடவசதியின்மையால் நாய் பிடிக்கும் வேலையை முன்னர் யாழ். மாநகராட்சிமன்ற சுகாதாரப் பிரிவினர் இடைநிறுத்தியிருந்ததாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (154)

# மாணவர் அமைப்பினால் நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வெளியிடப் படவிருக்கும் ''சுவடுகள்'', ''இதயநாதம்'', ''எங்கள் தாய்த் திருநாடு,' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை 16ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ந. இன்பன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நூல்களை

வெயிட்டு வைப்பார். வெளியீட்டுரையை கலை பண்பாட்டு கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார், ரி

# பிரிமா தொழிலாளர் வாகனங்களில் கடத்தல்

(கொழும்பு)

பிரிமா பேக்கரியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் சிலர் இலக்கத்தகடுகள் இல்லாத நீல நிற வாகனங்களில் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சம்பந்தப்பட்ட பேக்கரியின் தொழிலாளர்களின் வீடுகளுக்கும் சென்று தம்மை பொலிஸார் எனக் கூறியகோஷ்டி ஒன்றும் தொழிலாளர்களைக் கடத்தியதாகவும் சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட ஐந்து தொழிலாளர்களும் சி.ஐ.டி பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் விசாரணைக்காக அவர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்க மஜிஸ்திரேட் நீதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -இ

## முதலாம் இடம்

(உடுவில்)

மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தினரால் இவ்வருடம் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை சேர்ந்த இரு மாணவர்கள் முதற்பரிசாக தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் க. திலீபன் மேற்பிரிவு ஆண்கள் பிரிவிலும், செல்வன் பா. தயாபரன் மத்திய பிரிவு ஆண்கள் பிரிவிலும் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கங்களை பரிசாக பெற்றுள்ளனர்

109

# அமைதிப் பேச்சுக்கு மும்முனை எதிர்ப்பு;

# ஜனாதிபதி சந்திரிகா சமாளிப்பாரா?

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெற இருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதி திருமதி சந்திரிகா மும்முனைகளிலிருந்து மறைமுகமாக எழும்பும் எதிர்ப்புக்களையும் சமாளிக்க வேண்டிய நிலையில் தற்போது இருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்,

சமாதானப் பேச்சு வார்த்தை, யுத்தநிறுத்தம், பாதை திறப்பு போன்றவற்றுக்கு இராணுவத்திலுள்ள கடும் போக்காளர் விரும்பவில்லை என்பது அண்மைக் காலத்தில் இவர்களின்கூற்று வெளிப்படையாகவே எடுத்துக்காட்டுகின்றது.

அடுத்ததாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்போவதை தாம் வரவேற்பதாகக் கூறிக்கொள்ளும் சில தென்னிலங்கை சிங்களப் பத்திரிகைகள் சிங்கள மக்களை குழப்பத்தில் ஆழ்த்தக்கூடிய செய்திகளை மீண்டும் வெளியிடத் தொடங்கியுள்ளன.

''திவயின'' சிங்களப் பத்திரிகை கடந்த வாரம் வெளியிட்ட செய்தி ஒன்றில் :''பிரபாகரன். தனக்குத் தேவையானது சமஷ்டிஆட்சியே'' என்று கூறுவதாக தமது பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. ஆனல்சமஷ்டி என்றால் என்ன? என்ற விளக்கம் எதையுமே அதுவெளியிடவில்லை.

''யுக்திய'' சிங்களப் பத்திரிகை சந்திரிகாவின் சமாதான முயற்சி குறித்து புலிகள் நடுக்கம்'' என்ற செய்தியை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான செய்திகளைப் படிக்கும் சிங்கள மக்கள் உண்மையிலேயே விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்றே நினைப்பார்கள்.

அயல் நாடான இந்தியா கூட இந்த சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை வெளிவிவகாரகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமரிடம் இலங்கை இனப்பிரச்னை தீர்க்கப்படுவதை நாம் முழுமனதுடன் வரவேற்கின்றோம். அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவிருக்கும் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு நாம் ஒருபோதும் குறுக்கீடு செய்யமாட்டோம். விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை எம்மிடம் ஒப்படைக்கும்படி நாம் ஒருபோதும் இலங்கை அரசிடம் கோரமாட்டோம் என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

ஆனல் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 2-ம் எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பொட்டம்மான் தொடர்பான விசாரணைக்காக வந்தாறுமூலையைச் சேர்ந்த 76-வயதான பீதாம்பரம் சிவஞானம் என்ற விவாகப் பதிவாளரை இலங்கையின் இரகசியப் பொலிசார் இந்தியாவிடம் மிகவும் இரகசியமாகஒப்படைத்துள்ளனர்

இவ்வாறான விசாரணை ஒன்றுக்குத் தனது சொந்த நாட்டுப் பிரஜையை அயல் நாடு ஒன்றிடம் ஒப்படைப்பது தொடர்பான எந்த ஒரு ஒப்பந்தமும் இலங்கையிடம் இல்லாதபோது மேற்படி திருமணப் பதிவாளர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது எப்படி என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இவ்வகையான நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும்.

ஆகவே இவ்வாறான மறைமுக எதிர்ப்புகளைத் துணிச்சலுடன் ஜனாதிபதி திருமதி சந்திரிகா வருங்காலத்தில் சமாளித்து அவரின் புதிய அரசுக்கு போடப்படும் தடைகளைத் தாண்டி அவர் துணிவுடன் முன்னேறுவாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (வி-ரி)

## பரீட்சை முடிவு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ. த.) 94 பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சாத்திகளின் பெறுபேறுகள் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேரவில்லை. இவற்றை பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். -ரி

## மின்சாரம் பெற ஏற்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு புதிய ஜெனரேற்றர்கள் கிடைத்துள்ளது.

மின்சாரம் இன்மையால் இவ் வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளை குளிரூட்டி பாதுகாக்க முடியாத நிலை பலவருட காலமாக இருந்து வந்தது.

ஜெனரேற்றர்களை பொருத்துவதற்குரிய கட்டிட வேலை பூர்த்தியானதும் இரு ஜெனரேற்றர்களையும் அக்கட்டிடத்தில் இணைத்தபின்னர் அடுத்த மாதத்திலிருந்து மின்விநியோகம் கிடைக்குமெனவைத்தியசாலையின் பிரதம லிகிதர் திரு. பி. சிவநாதன் தெரிவித்தார். 160

இனப்பிரச்னை தீர்வு குறித்து

# இந்திய அரசின் மனப்போக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது

– ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தாம் மேற்கொண்டுள்ள சமாதான முன்முயற்சிகள் குறித்து இந்திய அரசின் மனப்போக்கு தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் புதுடில்லியில்நடைபெறவுள்ள சார்க் மகாநாட்டில் கலந்து கொள்ள தாம் இந்தியா செல்லக்கூடும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளையில் ஜனாதிபதி திருமதி சந்திரிகா அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகியதும் தெரிந்ததே. -க

## கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க கடனுதவி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் முகமாக கால்நடை வளர்ப்போருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கடனுதவி வழங்கி வருகின்றனர்.

இதற்கமைய கிராமிய நிதியத்தினூடாக கோப்பாய் பிரதேசத்தில் அண்மையில் இக் கடனுதவி வழங்கப்பட்டது.

கால்நடை வளர்ப்புக்கென நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் வைத்து முப்பத்தைந்து பயனாளிகளுக்கு மொத்தமாக இரண்டு லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டது.

ஆடு வளர்ப்பது சம்பந்தமான கருத்துரைகளும் பயிற்சிகளும் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மை பகுதியினரும் கோப்பாய் கால்நடை வைத்தியரும் இணைந்து நடாத்தினர். -109

## கோழிகள் திருட்டு

(கொழும்புத்துறை)

சுன்னாகம் மயிலங்காட்டிலுள்ள கோழிப்பண்ணை ஒன்றில் அண்மையில் இரவு நேரத்தில் பெரும்தொகை கோழிகள் திருடப்பட்டுள்ளது.

வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது கோழிக்கூட்டை உடைத்தே திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. - 154

## இலவச ஆங்கில வகுப்பு

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை மாவடி செஞ்சிலுவைச் சங்கக் கிளை ஜி. சி. ஈ, (உயர்தரம்)படித்த மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கிலப் போதனை வகுப்புகளை நடாத்தி வருகிறது (154)

## அனுராவிற்கு அமைச்சர் பதவி வழங்கப்படும்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்காவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைத்து அவருக்கு அமைச்சர் பதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றபோதிலும் கூடுதலாக அவர் பொதுசன முன்னணியின் அமைச்சராக பதவி பெறுவதற்கு சாதகமான நிலைமைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியில் 17 வருடங்கள் இணைந்திருந்த எஸ். தொண்டமான் பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவி பெற கட்சி இடம் கொடுத்திருப்பதால் அனுராவை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைப்பதற்கு என்ன தடை என்று சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் என்று 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது. -ம-ரி

## சங்காபிஷேகம்

(நெல்லியடி)

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய பவ வருஷ மணவாளக்கோல விழாவும், சங்காபிஷேகமும் அண்மையில் நடைபெற்றது. [160]

யாழ். செயலகத்திற்கு

# தகவல் தொடர்பு அதிகாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் தகவல் தொடர்பு அதிகாரிகளாக இரு அதிகாரிகள் அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பிரதேசச் செயலர் கலாநிதி க. குணராசா, யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர்திரு.செ.பத்மநாதன் ஆகிய இரு அதிகாரிகளுமே தகவல் அதிகாரிகளாக அரச அதிபரால் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இது இவ்வாறிருக்க யாழ். மாவட்ட செயலக நிர்வாக அபிவிருத்தி சம்பந்தமான சகல வேலைகளும் அரசஅதிபர் மட்டத்தில் தொடர்ந்தும் நடைபெறும் என்றும்கொழும்பிலிருந்து பொருட்களை எடுத்து வருவதற்கு அரசஅதிபர் இல்லாத வேளைகளில் அப்பத்திரங்களை சிபார்சு செய்வதற்காக பதில் அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், திட்டப்பணிப்பாளர் திரு. செ.பத்மநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். 162-ரி

# உருளைக்கிழங்கு பயிர்செய்கை விவசாயிகளுக்கு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் உருளைக்கிழங்கு பயிரிடுகை ஆரம்பமாகியுள்ளது. உருளைக் கிழங்கு உற்பத்தியை விருத்தியடையச் செய்வதற்கு யாழ். மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் பணிமனையினரால் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையின்படி உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கிய குறிப்புகள்; விதை கிழங்கு முளை அரும்பாவிட்டால் முளை அரும்பச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். விதை கிழங்கு ஒவ்வொன்றும் கட்டையான திடகாத்திரமுள்ள அரும்புகளைக் கொண்டதாக இருக்கவேண்டும். முளை அரும்பு இல்லாத கிழங்கை நடும்போது அக் கிழங்கு முளைப்பதற்கு நாட் செல்வதுடன், தொடர்ந்து மழை பெய்யுமானல் நாட்டப்பட்ட கிழங்குகள் அழுகிப்போகும் நிலை ஏற்படலாம். தனிமுளை நெடுத்து வளர்த்து இருந்தால் அந்த முளையை உடைத்து விட வேண்டும்.

உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு முன் நன்கு உக்கிய கூட்டெரு, மாட்டெரு போட்டு நிலத்தைப்பண்படுத்த வேண்டும். நடுகை செய்யும் கிழங்கை சிறிய நடுத்தர, பெரிய கிழங்குகளாகத் தரம் பிரித்து நடுகை செய்ய வேண்டும். அம்மோனியம்சல்பேற்று ரி. எஸ். பி. மியூறியேற் ஒவ் பொட்டாஸ் ஆகிய உரவகைகளை ஒன்றாகக் கலந்து உருளைக் கிழங்கு நடப்படும் குழிகளில் சமனாக இடப்படவேண்டும். நோய்கள் ஏற்படாதவாறு அவ்வப்போது பயிருக்கு ஏற்றவகையில் கிருமிநாசினிகள் தெளிக்கப்படவேண்டும். கிழங்கு நடுகை செய்யும் தரையின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாச்சனம் மேற்சொள்ளப்பட வேண்டும் கிழங்குகள் நாட்டப்பட்ட 15 அல்லது 20 நாட்களில் களைகளை அகற்றி சிறிதளவு மண் அணைக்கப்பட வேண்டும் 30 அல்லது 35 நாட்கள் சென்றதும் இரண்டாம் முறை களைகளை அகற்றி நன்றாக மண் அணைக்க வேண்டும். இலைக் கருகல் என்னும் நோய் உருளைக்கிழங்கைத் தாக்கும் முக்கிய நோயாகும். இந் நோயைக் கட்டுப்படுத்த மண் கோசேப், கப்டான், டதோனில், அன்ரகோல் அல்லது டைகபோல் ஆகிய பூஞ்சன நாசினிகளில் ஏதாவதொன்றைக் கணக்கின்படி பாவிக்கலாம்.

இப்பயிர்ச் செய்கையின் போது விவசாயிகளால் தீர்க்க முடியாத பிரச்னை ஏற்படின் உடனடியாக உங்கள் பகுதி விவசாய போதனாசிரியருடன் அல்லது மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளரைச் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள். -162-ரி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர்

**மணிவாக்கு**

உண்மையை உரைப்பவனுடைய உயிராற்றல் பெருகும். நாளுக்கு நாள் அவன் நல்லவனுவான்.
- இருக்குவேதம்

# இனப்பிரச்னைக்கான தீர்வு இலங்கையின்தெற்கிலுள்ளது

### சமாதான விழாவில் கருத்து

(கொழும்பு)

தற்போதைய சமாதான முயற்சிகள் முறிவடைந்தால் அதன்பின் சமாதானம் என்றே பேச முடியாத நிலை ஏற்படும் என கொழும்பில் இடம் பெற்ற சமாதான விழாவில் உரை நிகழ்த்திய பத்திரிகை ஆசிரியர்களும் அரசியற் பிரமுகர்களும் தெரிவித்துள்ளனர்.

இன்றைய சமாதானப் பேச்சுக்களின்மூலம்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவும் வேண்டும். இனப்பிரச்னைக்கான தீர்வு இலங்கையின் தெற்கிலுள்ளது.

தெற்கிலுள்ள இனவாதிகளை மககள் தோற்கடிக்க வேண்டும் இவ்வாறு மேற்படி சமாதான விழாவில் தெரிவிக்கப்பட்டது,

இவ்விழாவில் கலாநிதி சுமணசிறி லியனகே, பத்திரிகையாளர் எஸ். மனோரஞ்சன், யுக்திய ஆசிரியா சுனந்த தேசப்பிரிய, வாசுதேவ நாணயக்காரா; தர்ம சிறி பண்டாரநாயக்கா, அனிற்ரு பெர்னுந்து, எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர். -ரி

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைச்சங்கங்கள் ஊடாக பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணை விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணை 20 ரூபா வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு ஐந்து லீற்றர் மண்ணெண்ணை விநியோகிக் பட்டு வருகிறது. - 162

## நமது நோக்கு

### கிழக்கின் கல்வி நிலை

மட்டக்களப்பில் இராணுவக் கெடுபிடியினுல் கல்விச் சேவை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

வெறும் ஊகத்தின் அடிப்படையில் அவர் இதனைத் தெரிவிக்கவில்லை.

மாவட்டத்தின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்து, 1750க்கு மேற்பட்ட ஆசிரியர்களைத் தனியாகவும் குழுக்களாகவும் சந்தித்து உரையாடிப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பல பாடசாலைகளின் வாசல்களிலும், எல்லைகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் இளம் சிறுர்கள் பயமின்றிப் பாடசாலை சென்று படித்துவர முடியுமா?

ஆசிரியர்களும் அதிபர்களும் தமது கடமைகளை அச்சமின்றி, சுதந்திர உணர்வோடு செய்ய முடிகிறதா?

சோதனைச் சாவடிகள் பல நிறுவப்பட்டு, சோதனைகளும், குறுக்கு விசாரணைகளும் நடைபெறுகின்றன; சில வேளைகளில் தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

இதனுல் பாடசாலைக்குச் சென்று உரிய முறையில் கற்பிக்கும் தொழிற்பாட்டுக்கு மிக அவசியம் தேவைப்படும் உளச்சார்பு பாதிக்கப்படுகிறதல்லவா?

இது - தமிழ்ச்சிறுரின் கல்வியைத் திட்டமிட்டுக் கெடுக்கும் செயலெனச் சந்தேகிக்க இடமளிக்கிறது.

இதைவிட - கல்விக் கூடங்களில் பல வசதியீனங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக - தளபாட வசதியின்றி ஆசிரியர்கள் பலரும் படும் வேதனை அதிகரித்து வருகிறது.

தளபாடங்களுக்கு என்ன நேர்ந்தது? போதியளவு அங்கு அனுப்பப் படவில்லையா?

தளபாடங்கள் பல இராணுவ முகாம்களில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பில் கல்விக்கு இந்தக் கதி என்றல் ஏனைய சேவைகள் எப்படி இருக்கும்?

மழை வெள்ளத்தாற் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு இயற்கைக்கு மாத்திரமல்லாது செயற்கையாகவும் வேதனைகள் அதிகரித்திருப்பது விசனத்திற்குரியதே!

## இராசி பலன்

**15 - 12 - 1994**

வியாழக்கிழமை

(தமிழுக்குகார்த்திகை29)

திரயோதசி பின்னிரவு 4-02 வரை: பரணி முற்பகல் 9-48 வரை: சித்தயோகம் இராகுகாலம் பகல் 1-51 முதல் 5-34 வரை, சுபநேரம் காலை 7-51 முதல் 9-21 வரை. பிரதோச விரதம் கார்த்திகை விரதம்.

மேடம்: மனமகிழ்ச்சி, நண்பர் உதவி, பயணம்

இடபம்: விகடப் பேச்சு, குடும்ப விவகாரம், பணமுடை

மிதுனம்: தொழில் லாபம், சுபகாரியம், வயோதிபர் ஆசி

கடகம்: காரிய சித்தி, கடன் வசூல், குதர்க்கவாதம்

சிங்கம்: குடும்பப் பிரிவு, குழப்பமடைதல், வேதனை

கன்னி: ஏமாற்றப்படல், உடல் அசதி, கோபவார்த்தை

துலாம்: தியான நிலை. அதிகாரிகள் பாராட்டு, உபதேசம்

விருச்சிகம்: முயற்சி வெற்றி கல்வியில் சிறப்பு, பணவரவு

தனுசு: கீழோர் நட்பு, தொழில் வெறுப்பு, விசாரணை

மகரம்; பணியாள் துயர், வைத்திய செலவு, மனச்சுமை

கும்பம்: மனைச் சிறப்பு, எதிர்பாராத உதவி, தியாகம்

மீனம்: பிறர்குறை, தொழில் குழப்பம், துயரம்

ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-15**

வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்தமருத்துவக் குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் ''நிரந்தரமாக கஷ்டப்படவேண்டிய நிலை வேண்டாம்'' தனி நடிப்பு
08-30 செய்திகள்
08-40 ஏட்டிலிருந்து 23-10-1994 வீரகேசரி சஞ்சிகையிலிருந்து ''சமாதானமேதேவை உரிமைகள் அதற்கு உரமூட்ட வேண்டும்'' எனும் கட்டுரை
08-50 மலரும் மொட்டுக்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994-12-16**

வெள்ளி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# தொழில் பிரச்னையைதடுக்க விசேட பொலிஸ் படை

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் தொழிலாளர் பிரச்னைகள் மற்றும் போராட்டங்களைதடுக்கும் வகையில் அமைச்சர் குழு ஒன்றும் விசேட பொலிஸ்படையொன்றும் உருவாக்கப்போவதாக ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

சட்டபூர்வமான தொழிலாளர் பிரச்னைகளுக்கும் குற்ற நடவடிக்கைகளுக்கும் இடையே தெளிவான விளக்கம் தேவையென்றும் குற்றம்செய்து காரியம் சாதித்துக்கொள்வதை சகித்து கொள்ள முடியாது என்று ஜனுதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார், கே-ரி

## விதை கிழங்கு விநியோகம்

(உடுவில்)

உடுவில், உரும்பராய். புத்தூர் போன்ற கமநலசேவை போதனுசிரியர் பிரிவுகளின் தோட்டச் செய்கையாளர்களுக்கு விதை உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டுள்ளன.

விதை உருளைக்கிழங்குகளுக்கென விண்ணப்பம் செய்திருந்த தோட்டச் செய்கையாளர்களுக்கு விதை உருளைக் கிழங்கு விநியோகிக்கப்பட்டது. -104

### கூடிய லாபம் பெறும் சங்கம்

[ஆனைப்பந்தி]

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் 94 யூன் வரையிலான காலப் பகுதியில் அதிகூடிய இலாபமாக 14,75,786 ரூபாவை சுன்னுகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பெற்றுள்ளது. 101

## பலதும் பத்தும்

### மறப்போமா மட்டுவிலை!

திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரர் புராண படனம் நடைபெறுகிறதல்லவா? இதற்குச் சிறந்த உரை எழுதியவர் ம. க. வேற்பிள்ளை. ம. க. என்பது மட்டுவில் கணபதிப் பிள்ளை.

இவர் ஆறுமுகநாவலர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை ஆகியோரிடம் கல்வி கற்றவர். இவரது ஒரு மகன் திருஞானசம்பந்தர், ''இந்து சாதனம்'' ஆசிரியராக இருந்தவர். இன்னேர் மகன் பண்டிதர் மகாலிங்கசிவம்.

மகாலிங்கசிவத்தின் மகன் புலவர் பார்வதிநாதசிவம். ம. க. வேற்பிள்ளையின் தலைசிறந்த மாணுக்கர் யார்? சரசாலை பொன்னம்பலம், மீசாலை பண்டிதர் ஏகாம்பரநாதன், வண்ணை வித்துவான் ந. ச. சுப்பையா பிள்ளை, வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், மட்டுவில் முத்து உபாத்தியாயர், ஐயாக்குட்டி ஐயர் போன்ற பலர்.

இவரது தாயார் தான் பண்டிதமணி கணபதிப்பிள்ளையை வளர்த்தவராம். தகவல் தந்த மட்டுவில் கா. சிவபாலனுக்கு நன்றி.

—மயூரன்

அரசியல் பழிவாங்கலினுல்

# பாதிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கலினுல் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விண்ணப்பங்கள் கடற்றெழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சினுல் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் இத்திணைக்களத்தில் வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து இவ் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

1977 ம் ஆண்டுமுதல் 1994 ஆண்டுவரையிலான இவ் அமைச்சைச் சேர்ந்த சகல நிறுவனங்களிலும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் ஊழியர்களின் பிரச்னைகள் மூன் உரிமை அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் 802 விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. - க

அமெரிக்க

# விமானவிபத்தில் 15 பேர் பலி!

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட விமானத்தில் 15 பேர் உடல் கருகிப்பலியானுர்கள்.

கிறீன்ஸ் பரோலினுவிலிருந்து வடகரோலினு சர்வ தேசவிமான நிலையத்தை 28 பயணிகளுடன் பயணம் செய்த குறிபிட்ட விமானம் விமான நிலைய ஓடுபாதையில் இறங்க முற்பட்டவேளையில் இவ்விபத்து ஏற்பட்டதாம்.

மோசமான வானிலையே இவ்விபத்திற்கு காரணம் என புலன்விசாரணையின் போது தெரிவிக்கபபட்டதாம். -க

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை கப்பலில் கொண்டு வருவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பொதுமுகாமையாளரின் அவசரக் கலந்துரையாடல் நாளை 16-12-94 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறும்.

### கண்டெடுக்கப்பட்டது

செ. பாலரட்ணராஜா (சங்கானை கிழக்கு] என்பவருடைய குடும்ப அட்டையும் பையும் மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கபபட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

### கிறிஸ்து வருகை ஆயத்த வழிபாடு

(அரியாலை)

சகல கத்தோலிக்க ஆலயகளிலும் கிறிஸ்து பிறப்பு வருகைக்கான ஆயத்த வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

ஞாயிற்றுத்கிழமைகளில் மறை உரைகளும் ஒளி விழாக்களும் இடம் பெற்று வருகின்றன. -59

படை அதிகாரிகளுக்கு

# குண்டு துளைக்காத உடைகள்வழங்ககோரிக்கை

(கொழும்பு)

படை உயர் அதிகாரிகளுக்கு குண்டு துளைக்காத உடைகளை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டதாக 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கு முதல் நடவடிக்கையாக அரசாங்கம் 350 குண்டு துளைக்காத உடைகளைக் கொள்முதல் செய்வதற்கு 13 மில்லியன் ரூபாய்களை ஒதுக்க இருக்கின்றது.

இஸ்ரேல், பிரிட்டிஷ், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து இந்த உடைகளைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என்று 'ஹிரு' மேலும் தெரிவித்தது. -ம

### கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நோயாளர் நலன் புரிச் சங்க ஆதரவில் குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா கோப்பாய் ஆசிரியர் பயிற்சிய கலாசாலையில் எதிர் வரும் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும்

# இந்திய மீனவர் கத்திக்குத்து இரு இலங்கை மீனவர் பலி

## மன்னார் கடலில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் கத்திக்குத்துக்கிலக்காகிய இலங்கை மீனவர்கள் இருவர் உயிரிழந்ததுடன் மூன்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: பேசாலை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் கலைக்கமுற்பட்டபோதே அவர்களின் தாக்குதல்களுக்கு இலங்கை மீனவர்கள் உட்பட்டனர்.

இந்திய மீனவர்களின் கத்திக்குத்திற்கு இலக்காகிய இலங்கை மீனவரில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். மற்றும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்,

இவர்களை தாக்கிய இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் மீன்பிடித்துவிட்டே சென்றுள்ளனர். இதையடுத்து மன்னார் பகுதியில் பெரும் கொந்தளிப்புநிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு சில தமிழ் கட்சிகள் பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். -சி

# 28 இலங்கை கப்பல்கள் இந்தியாவிடம் பிடிபட்டன

(புதுடில்லி)

கடந்த இரு வருடங்களில் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 72 வெளிநாட்டு கப்பல்கள் இந்திய கடற்படையினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதாம்.

இதில் இலங்கை கப்பல்கள்-28, தாய்லாந்து-24, பாகிஸ்தான்-13, சீன, இந்தோனேசியா-3 ஆகும்.

இதேவேளை வங்கக்கடலில் மீன்பிடிக்கும் இந்திய மீனவரின் பாதுகாப்பு குறித்து இந்தியா இலங்கையுடன் தொடர்புகொண்டிருப்பதாக இந்திய பாதுகாப்பு இணையமைச்சர் திரு. மல்லிகா அர்ஜின் தெரிவித்துள்ளார். -சி

கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்தனர்.

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' விவகாரத்தால், இலங்கை-அமெரிக்க நல்லுறவுகள் அண்மைக் காலமாகப் பாதிப்புற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இரணவிலவில்இந்த வானொலி நிலையம் அமைப்பதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால், அரசுக்கு இந்த விவகாரம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ம-சி

# இந்துக் கோவில் தெற்கில் தீக்கிரை

(கொழும்பு)

தெற்கில் காடையர்கோஷ்டி ஒன்றினால் இந்துக் கோவில ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதுடன் அங்கிருந்து பெருமளவு பொருட்களும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இறக்குவான கொடகவில பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காடையரின் தீக்கு கோவில் பூசகரின் வீடும் இலக்காகி எரிந்துபோய்விட்டது. பூசகரையும் அவரது குடும்பத்தவரையும் கொலைசெய்யப் போவதாகவும் காடையர்கள் எச்சரித்துமுள்ளனராம்.

கோவிலில் நேர்த்திக்காக தானம் செய்யப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கோழிகளையும், ஆடுகளையும் காடையர் கொள்ளையடித்தும் சென்றுள்ளனர். -சி

# போப்புக்கு எதிர்ப்பு

## பௌத்த அமைப்புகள் முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு பாப்பரசர் வருகை தரும் நேரம், அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என்று சில பௌத்த அமைப்புகள் தீர்மானித்திருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

போப்பாண்டவர் அண்மையில் வெளியிட்ட புத்தகமொன்றில் பௌத்த மதம் பற்றிக் கூறிய கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பௌத்த சங்கியாவதோரோ அவர்கள் தீர்மானித்துள்ளார் என்று 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது.

இதேவேளை போப்பாண்டவரின் விஜயத்தை ஒட்டி கொழும்பில் பலத்த பாதுகாப்பு போடப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ம-சி)

ஐ. தே. க.வின்

# பிரதித் தலைவராக அநுராவை நியமிக்குக

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்குமாறு பல உறுப்பினர்கள் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது,

இந்த உறுப்பினர்கள் எதிர்வரும் 17ம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இதனை வலியுறுத்தவுள்ளனர்.

இதேவேளை 17ம் திகதிக்குப் பின்பு ஐக்கிய தேசியக் கட்சியின் முத்த உறுப்பினர்களும்பிரதேச அமைப்பாளர்களாகவும்கடமையாற்றிவரும் 35 பேரை நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு புதியவர்களை நியமிப்பதற்கு கட்சியின் தற்போதைய நிர்வாகக்குழு தீர்மானித்திருப்பதாகவும் 'யுக்திய' மேலும் தெரிவித்துள்ளது. ம சி

# போப்பைத் தரிசிக்க மக்கள் கிளாலியூடாகவே பயணம்?

(யாழ்ப்பாணம்)

இலங்கைவரும் பரிசுத்த பாப்பரரை தரிசிப்பதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படும் கத்தோலிக்க மக்கள் கிளாலி ஊடாக பயணம் செய்ய வேண்டிவரும் என்று யாழ். கத்தோலிக்க மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆசனக்கோவிலில் நடைபெற்ற திருப்பலி பூசை நேரத்தில் விடுக்கப்பட்டது.

கொழும்புப் பயணம் பற்றி மேலும் தெரிவிக்கையில்; பரிசுத்த பாப்பரசை தரிசிக்க கொழும்பு செல்ல விரும்பும் கத்தோலிக்க மக்கள் முன்கூட்டியே தமது பெயர்களை தத்தமது பங்குத் தந்தையர்களிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும். பதிவுசெய்து கொண்ட அனைவரும்அடுத்தமாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்திருந்து கொழும்புக்குக் கூட்டிச் செல்லப் படுவார்கள், இவர்களுக்கு கொழும்பில் உணவு. தங்குமிடவசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.

அடுத்த மாதம் 20ம் திகதி பரிசுத்த பாப்பரசர் கொழும்பு வந்து சென்றதும் 22-ம் திகதி அனைவரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவர். கொழும்பு சென்று மீண்டும் யாழ்ப்பாணத்துக்குவரும் வரை, அனைத்து மக்களும் தமக்கு வழங்கப்படும் விசேட பட்டிகளை எந்தநேரமும்தமது உடையில் அணிந்திருக்க வேண்டும் என்றும், வலியுறுத்தப்பட்டுள்ளது. (வி-சி)

கிரிக்கெட்;

# 3-வது டெஸ்டில் இந்தியா தோல்வி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் மே. இந்தியாவுக்குமிடையில் மொகாலியில் நடைபெற்ற 3 வதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட்டில் மே. இந்தியா 243 அதிகப்படியானஓட்டங்களால் வெற்றி பெற்றது.

4-ம் நாள் ஆட்ட முடிவில் இந்தியா தனது 2வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 37 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்று துடுப்பெடுத்தாடத்தொடங்கியது. மே. இந்திய அணியின் ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர்களான பெஞ்சமின், வோல்ஸ் ஆகிய இருவரின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்திய அணி ஆட்டக்காரர்கள், மதியபோசன இடைவேளைக்கு முன்பாகவே மொத் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சிது-11, ரெண்டுல்கர்-10, மஞ்ரகர் -17, ஹம்ளி-00, மொங்கியா-14, அஸாருதீன்-05, கபூர் - 01 கும்ளே-01, ராஜ் -16, ஸ்ரீநாத்-17 (ஆட்டமிழக்கவில்லை) ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மஞ்சேச்பிரபாகர் தலையில் காயப்பட்டதினால் மைதானத்திலிருந்து வெளியேறினர்.

பெஞ்சமின் 65 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் வோல்ஸ் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள். இந்தியாவின் கடைசித் துடுப்பாட்ட சோடிகளான ஸ்ரீநாத்தும், ராஜுவும் இரு இன்னிங்ஸிலும் இறுதி நேரத்தில் கூடிய ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது

ஸ்கோர் விபரம் மே, இந்தியா 443 ; 301 - 3 இந்தியா 387 : 114

மேற்படி இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு டெஸ்டுகளில் வெற்றி பெற்றமையால். இந்த டெஸ்ட் தொடர் எத்தரப்பினருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது. மே இந்திய அணி வீரர் ஜிம்மி அடம்ஸ் 3-வது டெஸ்டில் சிறந்த ஆட்டக்காரராகவும், இந்த டெஸ்ட் தொடரிலும் சிறந்த ஆட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வி-சி)

பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இந்தியா சென்று திரும்பிய இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர், விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா இலங்கை அரசிடம் கோரமாட்டாது என இந்திய அரசின் சார்பில் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக அறிவித்த ஒரு வாரத்தில், இந்திய வெளியுறவு இணையமைச்சர் இவ்வாறு கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. -சி

ஆனையிறவுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வோம் எனவும் இந்தசோதனை நடவடிக்கையை தாங்கள் தொடர்ந்தும் செய்வோமென்றும் படையினர் அரசுக்கு கூறியுள்ளனர்.

ஆனையிறவு பாதை திறக்கப்படுமானால் படையினர் பொதுமக்களை சோதனையிடக்கூடாது என விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வற்புறுத்திவரும் இவ்வேளையில் படையினர் அரசிடம் தமது மேற்படி நிலைப்பாட்டை தெரிவிதுள்ளனர்.

இதேவேளை போக்குவரத்திற்காக ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்டாலும் உடனடியாக அதனூடாக பொதுமக்கள் செல்லும் சாத்தியமில்லை எனவும் முகாமின் வடக்கு-தெற்குபகுதிகளில் பெருமளவு நிலக்கண்ணி வெடிகளும், மிதிவெடிகளும் புதைக்கப்பட்டிருப்பதால் இவை அகற்றப்பட பல நாட்கள் பிடிக்கலாமென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். -சி

# 44 வேலை நிறுத்தங்கள் அரசினால் தீர்த்துவைப்பு

(கொழும்பு)

பொதுசன முன்னணி அரசினால் பல வேலைநிறுத்தங்கள் சமரசமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று நடந்த பத்திரிகையாளர்கள் மகா நாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நேற்றுவரை அறிவிக்கப்பட்ட 60 வேலைநிறுத்தங்களில் 44 வேலை நிறுத்தங்கள் அரசாங்கத்தின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் நேரடியாகத் தலையிட்டதினால் இந்த வேலை நிறுத்தங்கள் தீர்த்து வைக்கக் கூடியதாக இருந்தது. மிகுதி வேலை நிறுத்தங்கள் விரைவில் தீர்த்து வைக்க முடியும் என்றார். (ம - சி

# 30,000 மெ. தொன் கோதுமை மா இறக்குமதி

(கொழும்பு)

30,000 மெற்றிக் தொன் கோதுமை மா இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் அறிவிக்கையில்; மாவின் விலை குறைக்கப்பட்டதில் இருந்து அதற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் பேருமளவு மாவை களஞ்சியப்படுத்தும் நோக்கத்தில் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண கூறியுள்ளார்.

ஒரு மாதத்தில் சுமார் 12,000 மெற்றிக்தொன் கோதுமைமா நாட்டில் பாவனைக்கு எடுக்கப்படுகின்றது, என்றும் அவர் தெரிவித்தார், (ம - சி)

இல. தூதரக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எவனிஸ் கூரே பிரித்தானிய அரசாங்கத்திடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். இவரின் இடத்துக்கு புதிய ஒருவரை அனுப்புவதற்கு இந்தச் சம்பவம் இடையூறாக இருக்கின்றது என்றார்.

எவன்ஸ்கூரே முன்னைய ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் தகவற்துறையின் செயலாளராகக் கடமையாற்றிவர் என்று பி, பி. சி சிங்களசேவை மேலும் தெரிவித்தது,

ஐ. தே.க.ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளில் தூதுவர்களாகவும் தூதரக அதிகாரிகளாக இருந்த பலரும் தற்போது இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இலங்கை திரும்ப மறுப்பு தெரிவித்துள்ளார்களாம்;

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-